**தமிழ்நாடு தகவல் ஆணையம்**

**எண்.19, அரசு பண்ணை கிராமம், பேர்ன்பேட்டை, நந்தனம்,**

**(ஓய்வூதியம் வழங்கும் அலுவலகம் பின்புறம்)**

**சென்னை - 600 035. தொலைபேசி எண்: 044-29515590**

**<u>ஆணை நாள்: 04.03.2025</u>**

**<u>முன்னிலை</u>**

**முனைவர் மா.செல்வராஜ் எம்.எஸ்.சி., பி.எச்.டி.,**
**மாநில தகவல் ஆணையர்**

……………

**<u>வழக்கு எண். SA6345/F/2023</u>**

திரு. P.அண்ணாதுரை … மனுதாரர்

/ எதிர் /

பொது தகவல் அலுவலர்,
துணை வட்டார வளர்ச்சி அலுவலர் (ஊ),
வட்டார வளர்ச்சி அலுவலகம்,
மரக்காணம்,
விழுப்புரம் மாவட்டம் 604 303. … பொது அதிகார அமைப்பு

**பார்வை:-**

| | |
|---|---|
| மனுதாரர் தகவல் பெறும் உரிமைச் சட்டம் பிரிவு 6(1) கீழ் மனு செய்த நாள் | **10.03.2022** |
| முதல் மேல்முறையீட்டு மனு நாள் - பிரிவு 19(1) | **05.07.2022** |
| இரண்டாம் மேல்முறையீட்டு மனு நாள் - பிரிவு 19(3) | **05.04.2023** |

******

**<u>ஆணை</u>**

மேற்குறிப்பிட்ட வழக்கு 04.03.2025 அன்று முற்பகல் ஆணையத்தில் வைத்து நேரடி விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. இன்றைய தின விசாரணையில் மனுதாரர் திரு.P.அண்ணாதுரை அவர்கள் ஆஜராகவில்லை. தமிழ்நாடு தகவல் ஆணையம் (மேல்முறையீட்டு நடைமுறை) விதிகள், 2012 விதி 7-ன்படி மனுதாரர் விசாரணைக்கு ஆஜராவது கட்டாயமாக்கப்பட்டுள்ளது. பொது அதிகார அமைப்பின் சார்பாக திரு. K. சுதாகர், பொதுத் தகவல் அலுவலர், துணை வட்டார வளர்ச்சி அலுவலர் (ஊ), வட்டார வளர்ச்சி அலுவலகம், மரக்காணம், விழுப்புரம் மாவட்டம் மாவட்டம். அவர்கள் நேரில் ஆஜரானார்.

2. மனுதாரர் 10.03.2022 தேதியிட்டு தகவல் பெறும் உரிமைச்சட்டம், 2005, பிரிவு 6(1)-ன் கீழ் தாக்கல் செய்துள்ள மனுவில், விழுப்புரம் மாவட்டம், மரக்காணம் ஒன்றியம் அசப்பூர்

பஞ்சாயத்து நிர்வாகம் குறித்து 2018 முதல் 2022 மார்ச் மாதம் வரை நடந்த வரவு செலவு குறித்த அனைத்து ஆவணங்களையும் பார்வையிடவும் கோரும் ஆவண நகல்கள் வழங்கவும் மற்றும் 2016 ஆம் ஆண்டு முதல் 2021 வரை நிதி ஆண்டுகளில் கிராம வளர்ச்சிக்காக மத்திய மற்றும் மாநில அரசு மூலம் வந்துள்ள நிதி தொகை எவ்வளவு அது குறித்த ஆவணங்களை பார்வையிட அனுமதி வழங்கவும் மற்றும் 2018 ஆண்டு முதல் 2022 வரை தேசிய ஊரக வேலை வாய்ப்பு திட்டம் தொடர்பான ஆவணங்கள், NRG, PMAY திட்டங்கள் தொடர்பான தகவல்களை பார்வையிட்டு, கோரும் ஆவணங்களை தகவலாக வழங்கக் கேட்டு விண்ணப்பித்துள்ளார்.

3. பொதுத் தகவல் அலுவலர் தகவல் ஏதும் வழங்காத காரணத்தால், மனுதாரர் 05.07.2022 நாளிட்ட பிரிவு **19(1)**-ன் கீழ் முதல் மேல்முறையீட்டு மனுவினை தாக்கல் செய்துள்ளார். மேல்முறையீட்டு அலுவலரும் தகவல் வழங்காத காரணத்தால் மனுதாரர் 05.04.2023 நாளிட்ட பிரிவு **19(3)**இன் கீழ் இரண்டாம் மேல்முறையீட்டு மனுவினை இவ்வாணையத்திற்கு தாக்கல் செய்துள்ளார். மனுதாரரின் இரண்டாம் மேல்முறையீட்டு மனுவின் அடிப்படையில் இவ்வழக்கு 04.03.2025 அன்று முற்பகல் நேரடி விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

4. இன்றைய விசாரணையில் ஆஜரான பொதுத் தகவல் அலுவலர், மனுதாரருக்கு ஏற்கெனவே 06.04.2022 மற்றும் 21.05.2022 நாளிட்ட கடிதங்கள் வாயிலாக அன்று காலை 11 அளவில் 13.04.2022 மற்றும் 07.06.2022 அன்று பார்வையிட அனுமதி அளித்துள்ளதாக ஆணையத்தில் தெரிவித்தார். மேலும் ஆணையத்தின் உத்தரவிற்கிணங்க முழுமையான தகவல்களை விரைவில் வழங்குவதாக ஆணையத்தில் தெரிவித்தார்.

5. இன்றைய விசாரணையின் முடிவில், மனுதாரின் மனுவையும் பொதுத் தகவல் அலுவலரின் பதிலையும் இணைத்து பரிசீலனை செய்கையில், மனுதாரருக்கு முழுமையான தகவல்களை வழங்கப்படவில்லை எனத் தெரிய வருகிறது. எனவே, இன்றைய விசாரணையில் பொதுத் தகவல் அலுவலருக்கு ஆணையம் **இறுதி வாய்ப்பு** வழங்கி கீழ்கண்டவாறு உத்தரவு பிறப்பிக்கின்றது:-

. ***மனுதாரர் 6(1) மனுவில் கோரிய அனைத்து இனங்களுக்கான முழுமையான தகவல்களை வழங்கும் பொருட்டு இவ்வாணை கிடைக்கப் பெற்ற ஒரு வார காலத்திற்குள் மனுதாரருக்கு அறிவிப்பு கடிதமொன்றை அனுப்பி, அலுவலக வேலை நேரத்தில் இதர அலுவலகப் பணிகளுக்கு குந்தகம் ஏற்படாவண்ணம் அலுவலகம் வரவழைத்து சட்டப்பிரிவு 2(j)ன்படி பார்வையிட அனுமதி அளித்து பின்னர் அவர் தனக்கு தேவைப்படும் தகவலை குறிப்பிட்டு கோரும்பட்சத்தில் அதனை ஒளிநகலெடுத்து, உரிய சான்றொப்பமிட்டு, தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005 சட்டப்பிரிவு 7(6)-ன் கீழ் கட்டணமின்றி வழங்கி, மனுதாரர் பெற்றுக்கொண்டதற்கான ஒப்புகை அட்டையின் நகல் மற்றும் பார்வையிட்ட வீடியோ அல்லது புகைப்படத்தையும் மற்றும் வழங்கப்பட்ட தகவலின் நகலினை இணைத்து ஒரு அறிக்கையாகத் தயாரித்து இவ்வாணையத்திற்கு பதிவஞ்சல் மூலம் அனுப்பி வைக்குமாறு பொதுத் தகவல் அலுவலருக்கு இவ்வாணையம் உத்தரவிட்டு, இவ்விரண்டாம் மேல்முறையீட்டு மனு முற்றாக்கம் செய்து உத்தரவிடப்படுகின்றது.***

**ஒம்/- (மா. செல்வராஜ்)**
**மாநில தகவல் ஆணையர்**

(ஆணையத்தின் ஆணைப்படி)

**உதவிப் பதிவாளர்**

**<u>வழக்கு எண். SA6345/F/2023</u>**

**பெறுநர்**

பொது தகவல் அலுவலர்,
துணை வட்டார வளர்ச்சி அலுவலர் (ஊ),
வட்டார வளர்ச்சி அலுவலகம்,
மரக்காணம்,
விழுப்புரம் மாவட்டம் 604 303.

**<u>மனுதாரர்/ மேல்முறையீட்டாளர்</u>**

திரு. P.அண்ணாதுரை, த/பெ. பாவாடை,
ஆலத்தூர் அஞ்சல்
மரக்காணம் வட்டம்,
விழுப்புரம் மாவட்டம் - 604 303

Copy to: Judgement File/ Spare.
JE/PA 05.03.2025